**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-153/2023**
**Dated :11.08.2026**
**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருணாகரன் | வயது | : | 48 |
| தந்தை பெயர் | : | முருகையன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | சிவந்தான்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)
**முதல் விசாரணை**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது சித்தப்பா ஆவார். கடந்த சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், மாலை 05.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர், எனது அத்தை பாக்கியம் என்பவருடன் தகராறு செய்து கொண்டிருந்த போது, நான் அதை கேட்டபோது என்னை அசிங்கமாக பேசி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்துவிட்டு ஓடி விட்டார். அவர் யார் என்று என்னால் அடையாளம் காண இயலவில்லை. எதிரி ஏற்கனவே பிரச்சினை செய்திருந்ததால், அவர் தான் அவ்வாறு செய்திருப்பார் என சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி மீது புகார் மனு கொடுத்து விட்டேன். அதன் பின்னர் தான் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிய வந்தது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. நாங்களும், எதிரியும் உறவினர்கள் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம். இருவரும் கையெழுத்து செய்த சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரி மீது மேல்நடவடிக்கை தேவையில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya sakshya Adhinayam'2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால், நீதியின் பொருட்டு, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலிசார் விசாரணையில் கடந்த 28.12.2020 ஆம் தேதி, மாலை 05.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, அங்கு வந்த ஆஜர் எதிரி, எனது அத்தை பாக்கியம் என்பவருடன் தகராறு செய்து கொண்டிருந்தார் என்றும், நான் அதை கேட்டபோது என்னையும் அசிங்கமாக பேசி, கையில் வைத்திருந்த கட்டையால் தாக்கி, காயம் ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்துவிட்டு ஓடி விட்டார் என்றும் வழக்கு சம்பவத்தில் நாங்கள் பாதிக்கப்பட்டோம் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஓம்.நா. சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-153/2023**
**Dated :11.08.2026**
**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW2 Examined as PW2 (Victim)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியம் | வயது | : | 59 |
| கணவர் பெயர் | : | சுந்தரவடிவேல் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | சிவந்தான்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)
**முதல் விசாரணை**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். அ.சா.1 எனது நாத்தனா மகன் ஆவார். கடந்த சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், மாலை 05.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர், என்னிடம் தகராறு செய்து கொண்டிருந்த போது, அ.சா.1 அதை கேட்டபோது அ.சா.1யை அசிங்கமாக பேசி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்துவிட்டு ஓடி விட்டார். அவர் யார் என்று என்னால் அடையாளம் காண இயலவில்லை. எதிரி ஏற்கனவே பிரச்சினை செய்திருந்ததால், அவர் தான் அவ்வாறு செய்திருப்பார் என சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி மீது அ.சா.1 புகார் மனு கொடுத்து விட்டார். அதன் பின்னர் தான் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிய வந்தது.

2. நாங்களும், எதிரியும் உறவினர்கள் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம். இருவரும் கையெழுத்து செய்த சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரி மீது மேல்நடவடிக்கை தேவையில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya sakshya Adhinayam'2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார்.**

**அதனால், நீதியின் பொருட்டு, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலிசார் விசாரணையில் கடந்த 28.12.2020 ஆம் தேதி, மாலை 05.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, அங்கு வந்த ஆஜர் எதிரி, என்னுடன் தகராறு செய்து கொண்டிருந்தார் என்றும், அ.சா.1 அதை கேட்டபோது அ.சா.1யையும் அசிங்கமாக பேசி, கையில் வைத்திருந்த கட்டையால் தாக்கி, காயம் ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்துவிட்டு ஓடி விட்டார் என்றும் வழக்கு சம்பவத்தில் நாங்கள் பாதிக்கப்பட்டோம் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஓம்.நா. சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>CC.NO- 153/2023</u>**
**Dated :11.08.2026**
**Deposition of witness for : P.W.3**

**Additional Witness Examined as PW.3 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜு | வயது | : | 56 |
| தந்தை பெயர் | : | குமார் | தாலுகா | : | கந்தர்வக்கோட்டை |
| கிராமம் | : | கந்தர்வக்கோட்டை | தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு முன்பு பணியில் இருந்த, உதவி ஆய்வாளர் பாஸ்கர் என்பவரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். அவர் இறந்துவிட்டதால் வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் பாஸ்கர் கடந்த 29.12.2020 ஆம் தேதி, கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில், நிலைய பொறுப்பில் இருந்த போது, சிவந்தான்பட்டி கிராமத்தினை சேர்ந்த முருகையன் மகன் கருணாநகரன் என்பவர், நிலையம் ஆஜராகி, கொடுத்த புகார்மனுவை பெற்று, நிலைய மனு ரசீது எண்.850/2020 வழங்கி விசாரணைக்கு பிறகு 05.01.2021 ஆம் தேதி நிலைய குற்ற எண் 12/2021 இல் சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) இதச-ன் கீழ் வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) பின்னர், இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 06.01.2021 ஆம் தேதி, காலை சுமார் 07.00 மணியளவில் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் பிரபாகரன் மற்றும் வீரப்பன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்துள்ளார். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3) பின்னர் பட்டியல் சாட்சிகள் கருணாகரன், பாக்கியம், முருகேசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளை விசாரித்ததில், வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில், எதிரி தலைமறைவாக இருந்து வந்ததால் அவரை வழக்கில் கைது செய்யவில்லை.

4) பின்னர் கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரபா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அ.சா.1க்கான விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வந்துள்ளார். **( மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** பின்னர் விசாரணையின் அடிப்படையில் எதிரி ரெங்கராசு சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால் அவரை வழக்கில் இருந்து நீக்கம் செய்தும், வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 323, 324, 506(ii) இதசவில் இருந்து 294(b), 324, 506(ii) இதசவாக பிரிவு மாற்றம் செய்தும், எதிரி நீக்கல் அறிக்கை மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். **( மேற்படி எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) ( மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**5)** பின்னர், இத்துடன் இந்த விசாரணையை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக **294(b), 324, 506(ii)** இதச -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும், உதவி ஆய்வாளர் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும்

பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**(ஓம்.நா. சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**